## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வோட்டேர்ஸ் எட்ஜ் லிமிட்டட் ("கம்பனி") மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ("தொகுதி") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் தொகுதியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டிறுதியில், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 14,845,673 பெறுமதியான கடன்பட்டோரிற்கு 100 சதவீத ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 6 மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோரிற்கு 71.78 சதவீதமான ரூபா 155,063 ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டது. ஐயக்கடன் ஏற்பாட்டிற்கு இத்தகைய அதிக சதவீதத்தை ஒதுக்குவது, கம்பனியின் கடன் அறவீட்டில் உள்ள பலவீனத்தைக் குறிப்பதும், ஐயக்கடன் ஏற்படுவதற்கான போக்கு இருக்கலாம் என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில், கம்பனியின் வியாபாரக் கடன்பட்டோரிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மொத்த ஐயக்கடன் | எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரகாரம் ரூபா 21,485,087 கடன்பட்டோர் ஏற்பாடு ஐயக்கடன் ஏற்பாடாக நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டது. ஐயக்கடனாக இனங்காணப்பட்டிருந்த ஆயுர்வேத திணைக்களத்தின் ரூபா 10,839,695 நிலுவைத் தொகையானது ஐயக்கடனிற்காக அதிக சதவீத ஏற்பாட்டை மேற்கொள்வதை விளைவித்திருந்ததுடன் கம்பனி இந்தத் தொகையை அறவிடுவதற்கு சட்டமா அதிபரிடம் சட்ட ஆலோசனையை கோரி வருகிறது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 21,485,087 ஆகும். இது மொத்தக் கடன்பட்டோர் பெறுமதியில் (கடன் அட்டை கடன்பட்டோர் தவிர) 42 சதவீதமான உயர் சதவீதமாகும்.

**1.5.2 முற்பணங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 இல் நடைபெற்ற 56 செயற்பாடுகளுடன் தொடர்புடைய ரூபா 7,485,000 தொகையான பெறப்பட்ட முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. | வோட்டேர்ஸ் எட்ஜின் செயற்பாட்டு நடைமுறையின் பிரகாரம், வாடிக்கையாளர்கள் தற்காலிக முன்பதிவை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவம் முடிவு செய்துள்ளது. | குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு நிலுவைத் தொகைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவம் முடிவெடுத்துள்ளதென முகாமைத்துவக் கருத்துரையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சபை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. முகாமைத்துவத்தின் முடிவுகள் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட 111 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 14,211,705 முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி நாள் வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவு**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 353,264,660 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 153,100,425 தொகையானதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 506,365,085 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் அதிகரித்தமை மற்றும் நிதி வருமானம் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

ரூபா 000

| நிதிக்கூற்று வரிசை உருப்படி | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 2,172,929 | 1,134,270 | 863,696 | 1,312,520 | 1,305,769 |
| வருமான அதிகரிப்பு/ குறைவு | 1,038,659 | 270,574 | (448,824) | 6,751 | (14,392) |
| % ஆக வருமானத்தின் அதிகரிப்பு/ (குறைவு) | 92 | 31 | (34) | 0.5 | (1) |
| மொத்தலாபம் | 1,283,272 | 702,280 | 541,185 | 880,524 | 808,645 |
| மொத்தலாப அதிகரிப்பு/ குறைவு | 580,992 | 161,095 | (339,339) | 71,879 | (17,577) |
| % ஆக மொத்தலாபத்தின் அதிகரிப்பு/ (குறைவு) | 83 | 30 | 39 | 9 | (2) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 36,795 | 22,230 | 14,803 | 30,099 | 66,962 |
| ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் அதிகரிப்பு/ குறைவு | 14,565 | 7,427 | (15,296) | (36,863) | 16,316 |
| % ஆக ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் அதிகரிப்பு/ (குறைவு) | 66 | 50 | (51) | (55) | 32 |
| நிதி வருமானம் | 112,684 | 17,704 | 22,904 | 17,853 | 29,499 |
| நிதி வருமானத்தின் அதிகரிப்பு/ குறைவு | 94,980 | (5,200) | 5,051 | (11,646) | (8,570) |
| % ஆக நிதி வருமானத்தின் அதிகரிப்பு/ (குறைவு) | 536 | (23) | 28 | (39) | (23) |
| நிர்வாகச் செலவினங்கள் | 873,456 | 738,235 | 609,067 | 709,749 | 671,632 |
| நிர்வாகச் செலவினங்களின் அதிகரிப்பு/ குறைவு | 135,221 | 129,168 | (100,682) | 38,117 | 41,154 |
| % ஆக நிர்வாகச் செலவினங்களின் அதிகரிப்பு/ (குறைவு) | 18 | 21 | 14 | 6 | 7 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் | 100,552 | 31,600 | 30,715 | 56,738 | 64,384 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினங்களின் அதிகரிப்பு/ குறைவு | 68,952 | 885 | (26,023) | (7,646) | (4,714) |
| % ஆக விற்பனை மற்றும் விநியோக செலவினங்களின் அதிகரிப்பு/ (குறைவு) | 218 | 3 | (46) | (12) | (7) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 353,265 | (153,100) | (73,682) | 133,624 | 146,862 |
| வரிக்குப் பின்னரான இலாபத்தின் அதிகரிப்பு/ குறைவு | 506,365 | (79,418) | (207,306) | (11,238) | (37,212) |
| % ஆக வரிக்குப் பின்னரான இலாபத்தின் அதிகரிப்பு/ (குறைவு) | 331 | (108) | (155) | (8) | (20) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | 2022 | 2021 |
|---|---|---|
| மொத்தலாப விகிதம் (%) | 0.59 | 0.62 |
| ஈடுபடுத்திய முதல் மீதான திரும்பல் (%) | 0.08 | 0.21 |
| நடைமுறை விகிதம் | 1.65 | 1.13 |
| விரைவு விகிதம் | 2 | 1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 57,337,629 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மதுபானசாலையை (Sport bar) 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து விளைவற்றுள்ளதுடன் தற்போது அது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. | பல்வேறு காரணங்களால், அந்த நேரத்தில் மீதமுள்ள பணி முடிவடைந்த பின்னர் மற்றொரு வணிக மாதிரியாக மீண்டும் திறக்கப்படுவதற்கான புரிந்துகொள்ளலுடன் இந்த செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது, எனினும், அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் கணக்கீட்டு தேவைப்பாடாக ரூபா 57,337,629 பெறுமதியான நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டது. வோட்டேர்ஸ் எட்ஜ் முகாமைத்துவம் தற்போதுள்ள உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு வணிக ரீதியாக சாத்தியமாக உள்ள அதே வளாகத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைத் தேடுவதற்கு மீள் மதிப்பீடு செய்ய வேண்டும். | முதலீடு செய்வதற்கு முன்னர் சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பத்தரமுல்லை ஹோட்டல் வளாகத்தில் 48 அறைகள் கொண்ட பூட்டிக் (boutique) ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட ரூபா 1,405,700,000 தொகையான கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த ரூபா 240,000,000 தொகையான கடன் வசதிக்காக ரூபா 7,577,515 மேலதிக வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனி ஆரம்பத்தில் 48 அறைகள் கொண்ட பூட்டிக் ஹோட்டலை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.4 பில்லியன் பெறுமதியான கடன் வசதியை பெற்றிருந்தது. எனினும், பூட்டிக் ஹோட்டலில் இருந்து வருமானம் கிடைக்கும் வரை தற்போதைய செயற்பாட்டு காசுப்பாய்ச்சலில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படும் வரை கம்பனி அசல் கடனின் வட்டிப் பகுதி மற்றும் ரூபா 240 மில்லியன் தொகையான மற்ற கடனின் வட்டிப் பகுதி என்பவற்றை ஈடுசெய்வதற்கு ரூபா 240 மில்லியன் தொகையான மற்றொரு கடனை கோரியிருந்தது. | ஒரு முடிவை எடுப்பதற்கு முன்னர் சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தியத்த புகையிரத உணவகம் தொடர்பாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் | உடன்படிக்கையை இறுதி செய்வது தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் பல பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இரு தரப்பினரும் 2022 ஆகஸ்ட் மாதத்தில் | உரிய காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2018 பெப்ரவரி 28 முதல் 2022 யூலை 31 வரையான காலப்பகுதிக்கான வட்டியாக ரூபா 19,527,684 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. | முடிவு செய்ததால், நாங்கள் அதற்கேற்ப கணக்கீடு செய்துள்ளோம். மேலும், SLLRDC முதலில் 15% வட்டி விகிதத்தை பரிந்துரைத்தது, இது கம்பனியால் இணங்கப்படவில்லை, அதன் மூலம் கம்பனியால் 5% வரை விலைவிகிதத்தை குறைக்க முடிந்தது. ஆனால், உடன்படிக்கையை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், மேலதிக வட்டி கொடுப்பனவு ஏற்பட்டிருந்தது. | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லாலா பூங்காவில் இருந்து வருடாந்த வாடகையாக ரூபா 10,719,033 தொகை ஈட்டப்பட்டிருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கை காணிக்கான குத்தகைதாரருடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எக்ஸ்ட்ரீம் அட்வென்ச்சர் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் வோட்டேர்ஸ் எட்ஜ் லிமிட்டட் ஆகியவற்றுக்கு இடையே 2017 திசெம்பர் 21 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் எமது தாய் கம்பனியான UDA இன் புரிதலுடன் 2022 ஆம் ஆண்டு முதல் வாடகை வருமானமாக ரூபா 10,719,033 தொகை பெறப்பட்டது. எனினும், இது UDA உடன் காணிக்கான குத்தகை உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தையில் உள்ளது. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 48 அறைகள் கொண்ட பூட்டிக் ஹோட்டல் நிர்மாணத்தின் ஆரம்ப தொடக்க திகதி 2019 ஒக்தோபர் 02 ஆகவும் பூர்த்திசெய்தல் திகதி 2021 மார்ச் 24 ஆகவும் காணப்பட்டது. எனினும், 2019 இல் நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டதால், 2021 நவம்பர் 06 இல் மீண்டும் தொடங்கப்பட்ட திகதி வரை ஏறத்தாழ 24 மாதங்கள் நிர்மாணம் தாமதமானது. மேலும், சபைத் தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தை 20 அறைகளாகக் குறைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது, மேலும் புதிய பூர்த்திசெய்தல் திகதி 2023 நவம்பர் 01 ஆகும். எனினும், பூட்டிக் ஹோட்டல் | தொற்றுநோய் காலம், நிர்மாணத்திற்குத் தேவையான பதவியணி உறுப்பினர்கள் இல்லாதமை மற்றும் தொற்றுநோய்க்குப் பின்னரும் சில பொருட்கள் கிடைக்காதமை மற்றும் கட்டிடப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட நியாயப்படுத்த முடியாத அதிகரிப்பு, முக்கிய நிர்மாணப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விலை உயர்வை விளைவித்தமை, ஒப்பந்த உடன்படிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் விலை ஏற்றத்தை மேலும் சீர்செய்வதற்கு ஒப்பந்ததாரர் கோரியிருந்தமை போன்ற பல காரணங்களால் நிர்மாணத்தை எதிர்பார்த்தவாறு அமுல்ப்படுத்த முடியவில்லை. மேலும், திருத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கை, | செயற்திட்ட முன்மொழிவின் காலக்கெடுவிற்கு ஏற்ப செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணப் பணிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட அளவைத் திட்டம் மற்றும் தொடர்புடைய பெறுகைக் குழுக்களிடமிருந்து விலை உயர்வுக்குத் தேவையான அங்கீகாரம் போன்ற தேவையான பிணையங்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக கடனின் மீதிப் பகுதியைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், தற்போது, கடன் வசதியை மீண்டும் செயற்படுத்துவதற்கான அனைத்து ஆவணங்களையும், கடந்த காலத்தில் நிலுவையாக இருந்த தேவையான ஆவணங்களையும் கம்பனியின் முகாமைத்துவத்தால் பூர்த்தி செய்ய முடிந்தது. நிர்மாணம் தாமதமாகியிருந்த போதிலும் அசல் ஒப்பந்தத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிர்மாணப் பணிகளை முகாமைத்துவத்தால் தொடர முடிந்தது. தற்போதைய முகாமைத்துவம் 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1 வது கட்டத்தில் குறைந்தபட்சம் 20 அறைகளுடன் ஹோட்டல் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் 2 வது கட்டத்தில் மிகுதி 28 அறைகளை பூர்த்தி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது. | |
| (ஆ) | பூட்டிக் ஹோட்டல் நிர்மாணத்திற்காக நிலவும் பொருளாதார நெருக்கடியின் கீழ் விலைத் தளம்பல்களுடன் கூடிய திருத்தப்பட்ட அளவுப் பட்டியல் கணக்காய்வு திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விலைத்தளம்பலுடன் திருத்தப்பட்ட BOQ இறுதி செய்யப்படாததால் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | விலைத்தளம்பலுடன் திருத்தப்பட்ட BOQ ஐ உடனடியாக இறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், குறித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு ஏறத்தாழ 21 மாதங்களும் முற்பண கொடுப்பனவை விடுவிப்பதற்கு மேலும் 2 மாதங்களும் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், குறித்த நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு 2018 பெப்ரவரி முதல் 2022 சனவரி வரை ஏறத்தாழ 4 வருடங்கள் | இந்த செயற்திட்டம் கொவிட் - 19 தொற்றுநோய் காலத்தில் தொடங்கப்பட்டு தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பட்டியலிடப்பட்ட திகதிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், பொறியியலாளர் மதிப்பீடு, ஒப்பந்ததாரருடன் கைச்சாத்திடப்பட்ட அளவுப் பட்டியலுடனான உடன்படிக்கை, பூர்த்தியாக்கல் சான்றிதழ் என்பவற்றை கம்பனி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கத் தவறியிருந்தது. | | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டை உள்ளடக்கும் காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படும். | கூட்டிணைந்த திட்டம் அதன் மூலோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கா அங்கீகரிக்கப்பட்ட பாதீடு உடன செயல்நடவடிக்கைத் திட்டமா கருதப்படுகிறது. | கம்பனி ஆண்டு தொடக்கத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து, அங்கீகாரத்தை பெற்று அதன் வருடாந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அமுல்ப்படுத்த வேண்டும். |